# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட / இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

2014 / 2015 –(2017 டிசம்பர்)

## TLS 3233 - தமிழ் நாவலும் சிறுகதையும்
## Tamil Novel & Short Story

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரு வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

01. நாவல் என்னும் இலக்கிய வகையின் தோற்றத்துக்குக் காரணமாக அமைந்த சமூக, இலக்கியப் பின்னணிகளை விளக்குக. (25 புள்ளிகள்)

02. “காவியச் செல்வாக்கிலிருந்து முற்றிலும் விடுபட முடியாத சூழ்நிலையில் ஆரம்பகாலத் தமிழ் நாவல்கள் இருந்துள்ளன.” இக்கூற்றிற்கான காரணங்களை விபரிக்குக. (25 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(அ) ஈழத்துத் தமிழ்ச் சாதிய நாவல்கள்
(ஆ) நாவலில் பாத்திரவார்ப்புப் பெறும் முக்கியத்துவம்
(இ) ராஜம் கிருஷ்ணனின் நாவல்கள்
(ஈ) ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் புகலிட நாவல்கள்
(12½ x 2 = 25 புள்ளிகள்)

### பகுதி II

04. ஆரம்பகாலச் சிறுகதை முன்னோடிகளில் வ.வே.சு. ஐயர் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க. (25 புள்ளிகள்)

05. தமிழ்ச் சிறுகதை மணிக்கொடி எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன் **அல்லது** கு. ப. ராஜகோபாலன் தமிழ்ச் சிறுகதைக்கு ஆற்றிய பங்களிப்பினை விபரிக்குக. (25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(அ) நாவலுக்கும் சிறுகதைக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமைகள்.
(ஆ) மலையகச் சிறுகதைகள்
(இ) ஜெயகாந்தன் சிறுகதைகள்
(ஈ) அம்பையின் சிறுகதைகள்
(12½ x 2 = 25 புள்ளிகள்)

***********************************